Q-1

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 25**

**மேற்சான்றிதழ்க் கல்வி – நிலை 3 (HG30)**

**ஜனவரி–பிப்ரவரி 2026**

**நேரம் : 2.30 மணி நேரம்** **மதிப்பெண் : 75**

**பிரிவு – 1**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
**Answer all questions in a word / line. (10x1 = 10)**

1. வேதநாயகம் பிள்ளையின் பெற்றோர் யாவர்?
2. நாமக்கல் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?
3. திருக்குறள் எந்த 'பா' வகையைச் சார்ந்தது?
4. படமெடுத்து ஆடுவது எது?
5. பண்ணை என்பது எது?
6. சிற்றிலக்கியங்களின் வகை எத்தனை?
7. பாரதிதாசன் யாரை தன் ஆசிரியராக ஏற்றுக்கொண்டார்?
8. வினா எத்தனை வகைப்படும்?
9. புணர்ச்சி என்றால் என்ன?
10. தமிழ்மொழியில் பாக்கள் எத்தனை வகைப்பெறும்?
11. பொருத்தமற்ற காதலை புறத்திணை எவ்வாறு குறிப்பிடுகிறது?

**பிரிவு – 2**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
**Answer any ten questions in three lines each. (10x2=20)**

1. நிலவை ஏன் போற்ற வேண்டும்?
2. தேவாரத்தை இயற்றியவர்கள் யாவர்?
3. சிறுபஞ்சமுலம் என்பதன் பெயர்க்காரணம் கூறுக.
4. ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
5. மழை பெய்வதற்குரிய அறிகுறிகள் யாவை?
6. காவிரி ஆறு தமிழகத்தின் எப்பகுதிகளை வளப்படுத்துகிறது?
7. நெடுஞ்செழியனைப் பாடிய புலவர்களின் பெயர்களை எழுதுக.
8. தமிழ்நாட்டின் சிறப்புகள் யாவை?
9. இறைவன் எப்படி உள்ளான் என கூறுகிறார் உமறுப்புலவர்?

10. பாடாண் திணை என்றால் என்ன?
11. பொருள்கோள் என்றால் என்ன?
12. நான்கு வகைப் பாக்கள் யாவை?
13. இரட்டுற மொழிதல் அணி எவ்வாறு அமையும்?
14. மரபு என்றால் என்ன?

**பிரிவு – 3**

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
**Answer any five questions in six sentences each. (5x4=20)**

1. நாமக்கல் கவிஞரின் மொழி வாழ்த்துப் பாடலின் கருத்தை விவரித்து எழுதுக.
2. திருஞானசம்பந்தர் குறிப்பு வரைக.
3. சீறாப்புராணம் இறைவன் குறித்து கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
4. விகாரப்புணர்ச்சி என்பது யாது?
5. வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
6. திசைப்பெயர்ப் புணர்ச்சி எடுத்துக்காட்டுடன் விளக்குக.
7. கலவை வாக்கியம் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**பிரிவு – 4**

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
**Answer any one of the following questions in fifteen sentences. (1x10=10)**

1. பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது கூறுபாடுகளை எழுதுக.
2. குற்றாலத்தின் ஒன்பது அருவிகள் குறித்து விவரித்து எழுதுக.
3. வல்லினம் மிகா இடங்களைச் சான்றுடன் விளக்குக.

**பிரிவு – 5**

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. தமிழ்நாட்டின் சிறந்த ஆறு காவிரியின் சிறப்பு குறித்து விளக்குக.
2. தமிழ் மொழியின் சிறப்புகளாக பாவாணர் கூறுவன யாவை?

.........